
# ஜோதி
## ஐக்கூ அந்தாதி




ஆன்மீக செம்மல் ஞானசற்குரு


**சிவ செல்வராஜ்**

தங்க ஜோதி ஞானசபை

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

கன்னியாகுமரி.


ஜோதி
ஐக்கூ அந்தாதி




ஆன்மீக செம்மல் ஞானசற்குரு
சிவ செல்வராஜ்
தங்க ஜோதி ஞானசபை
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
கன்னியாகுமரி.

# காணிக்கை

**திரு அருட்பா தந்த**
**திருவருட் பிரகாச வள்ளலார்**
**இராமலிங்க சுவாமிகள்**
**பொற்பாதங்களில்**
**பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன்**




| | |
|---|---|
| தோற்றம் | : 05-10-1823 |
| சன்மார்க்க சங்கம் | : 1865 |
| சத்திய தருமச்சாலை | : 1867 |
| சித்தி வளாகம் | : 1870 |
| சத்திய ஞான சபை | : 1872 |
| ஒளியாகி எங்கும் நிறைந்தது | : 30-01-1874 |

# ஜோதி ஐக்கிய அந்தாதி



ஆன்மீகச் செம்மல்
ஞானசற்குரு சிவ செல்வராஜ்
தங்க ஜோதி ஞான சபை
17/49-P, கலைஞர் குடியிருப்பு, கன்னியாகுமரி - 629 702
www.vallalyaar.com Mobile : 9245153454

## பதிப்பு விபரம்


| | |
|---|---|
| நூல் | : ஜோதி ஐக்கூ அந்தாதி |
| ஆசிரியர் | : ஞானசற்குரு ஆன்மீகச் செம்மல் சிவசெல்வராஜ் |
| பொருள் | : ஆன்மீகம் |
| உரிமை | : S.S. சுயம்ஜோதி<br>யார் வேண்டுமானாலும் வெளியிடலாம் |
| வெளியிடுவோர் | : தங்க ஜோதி ஞானசபை<br>சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்<br>17/49-P, கலைஞர் குடியிருப்பு<br>கன்னியாகுமரி - 629702.<br>www.vallalyaar.com<br>Cell : 9245153454 |
| காணிக்கை | : ரூ. 100 |
| முதல் பதிப்பு | : 15-08-2006 இந்திய சுதந்திர தினம்<br>2000 பிரதிகள் |
| ஞானதானம் | : S. தங்கம், S.S. சுயம்ஜோதி |
| இரண்டாம் பதிப்பு | : 27-01-2013 தைப்பூசம் 2000 பிரதிகள் |
| ஞானதானம் | : தங்க ஜோதி ஞானசபை - ஒசூர் |


### தங்க ஜோதி ஞான சபையின் ஒசூர் சீடர்கள்



பத்மநாபன் மகேஷ் அரவிந்த் லோகநாதன்

அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்சோதி
அருட்பெருஞ்சோதி

# தங்க ஜோதி ஞானசபை


சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
17/49-P, கலைஞர் குடியிருப்பு
கன்னியாகுமரி - 629702.


## பணிவுரை

ஆன்மநேய ஒருமைப்பாடுடையீர், வந்தனம். நன்றி, நலமே நிலவுக எல்லாம் வல்லவரான, எங்கும் நிறைந்த இறைவன் திருவருளால், சற்குரு திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்கள் ஆசியால், அடியேனை ஆன்மீக பாதையில் நடைபயில வைத்த கருணையின் திருஉருவம் ஜோதி இராமசாமி தேசிகர் அவர்கள் தூண்டுதலால், அடியேன் 21-03-1992 இல் முதன்முதலாக கண்மணி மாலை என்னும் ஞான விளக்கம் கூறும் நூலை ஞானிகள் ஆசியுடன் வெளியிட்டேன்.

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என் உள்ளிருந்து தூண்ட பற்பல கவிநூற்கள் ஆக்கினேன். இறைவனை சுட்டும் இனியபாக்களே என் கை எழுதியது! ஆன்மீக வழிகாட்டும் அறிவுப் பாடல்களே! எனது பிரார்த்தனையும் கூடவே இணைந்தது.

இரண்டாவதாக 21-12-1995 அனுமன் ஜெயந்தியன்று தேரூர் குருமகாதேவ் இராமதாச பரமஹம்ஸர் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய விநாயகர் அனுமன் துதிகள் 108-ஐ இலவச புத்தகமாக மதுரை அன்பர் திரு. A. மகாலிங்கம் அவர்கள் வெளியிட்டார்கள்.

மூன்றாவதாக 23-01-1996 தோட்டியோடு ஸ்ரீ மௌன குரு சுவாமிகள் குருபூஜையன்று குருவருளால் அடியேன் எழுதிய ஸ்ரீ மௌனகுரு சுவாமிகள் துதிகள் 108-ஐ இலவச புத்தகமாக இரணியல் அன்பர் திரு. K. நீலகண்டன் அவர்கள் வெளியிட்டார்கள்.

நான்காவதாக 28-07-1996 பிரதோஷத்தன்று மருந்துவாழ்மலை ஓம் உன் திருவருளடி ஆனந்த காளிதாசன் சுவாமிகள் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய ஸ்ரீ சுந்தரேஸ்வர் துதிகள் 108-ஐ இலவச புத்தகமாக ஆரல்வாய்மொழி ஜோதி குரு ஞானசபை அன்பர் சிவத்திரு இராமசாமி நாடார் அவர்கள் வெளியிட்டார்கள்.

ஐந்தாவதாக 16-09-1996 விநாயகர் சதுர்த்தியன்று ஸ்ரீ அறுகம்புல் சித்தர் நடராஜ சுவாமிகள் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய ஸ்ரீ அறுகம்புல் சித்தி பாலவிநாயகர் துதிகள் 108-ஐ இலவசப் புத்தகமாக கோணம் ஸ்ரீ அறுகம்புல் சித்தர்த்தபோவன டிரஸ்ட்டார் வெளியிட்டார்கள்.

ஆறாவதாக 13-10-1996 நவராத்திரி முதல் நாளில் திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்களின் 174-ஆவது திரு அவதார தினநன்னாளில் என் குரு ஜோதி இராமசாமி தேசிகர் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய ஸ்ரீ ஆயுர்தேவி துதிகள் 108-ஐ இலவசப் புத்தகமாக வேம்பனூர் அன்பர் திரு. P.K. மாதவன் நாயர் அவர்கள் நினைவாக அவர்தம் மனைவி திருமதி. M. ஹைமாவதி தங்கச்சி அவர்கள் வெளியிட்டார்கள்.

ஏழாவதாக, 14-01-1997 பொங்கல் நாளில் அடியேன் எழுதிய தேரூர் குருமகாதேவ் இராமதாச பரமஹம்சர் போற்றி பாடல்கள், ஸ்ரீ அழகிய

மணவாள விநாயகர் துதிகள் ஆக 108-ஐ இலவசப் புத்தகமாக பள்ளத்தூர் வாழும் உத்தம தம்பதிகள் திரு. S. தங்கமணி நாடார் திருமதி. S. தங்கப்பழம் நாடாச்சி ஆகியோர் வெளியிட்டார்கள்.

எட்டாவதாக 07-03-1997 மகா சிவராத்திரி திருநாளில் அடியேன் எழுதிய திருப்பன்னிபாகம் அருள்தரும் ஸ்ரீ ஆஞ்சநேய ஸ்வாமி துதிகள் 108-ஐ இலவசப் புத்தகமாக, எனது தந்தை ஜெயகுமாரி ஸ்டோர்ஸ் உரிமையாளர் திரு. K. சிவசுப்பிரணியப்பிள்ளை அவர்களின் 80 வயது நிறைவைக் கொண்டாடும் விதமாக எனது மகன் S.S. சுயம்ஜோதி Pre K.G. அவர்கள் வெளியிட்டார்கள்.

ஒன்பதாவதாக பேயோடு அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக திருநாளில் 15-06-1997-ல் பேரருள் புரியும் பேயோடு ஸ்ரீ குருதவசி ஐயா பாமாலை 108-ஐ இலவச புத்தகமாக ஸ்ரீ குருதவசி ஐயா குடும்பத்தாராகிய பேயோடு ஊர் பொதுமக்கள் வெளியிட்டார்கள்.

பத்தாவது நூலாக, அடியேன் முதலில் வெளியிட்ட கண்மணிமாலை பல புதிய பகுதிகள் சேர்க்கப்பட்டு 10-09-2002 விநாயகர் சதுர்த்தியன்று கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மன் பொற்பாதங்களில் சமர்ப்பித்து வெளியிட்டோம்.

பதினொன்றாவது நூலாக, சற்குரு வள்ளலார் தூண்டுதலால் அடியேன் அருள்மணி மாலை என்னும் ஞானவிளக்க நூலை எழுதி 18-02-2004 மஹா சிவராத்திரியன்று கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மன் பொற்பாதங்களில் சமர்ப்பித்து வெளியிட்டோம்.

பன்னிரண்டாவது நூலாக அடியேனை காத்து இரட்சிக்கும் அகில உலக அன்னை, ஆதி சக்தி, கன்னிகா பரமேஸ்வரி, பாலா, வாலை, தாய், கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மனை வேண்டி பிரார்த்தித்து ஸ்ரீ பகவதி அந்தாதியை இயற்றி நாகர்கோவில் கெங்கா ஜுவெல்லர்ஸ் பேருதவியால் 23-06-2004 ஆனி-மகம் மாணிக்கவாசகர் குருபூஜையன்று அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகி, மகாமாயை கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மன் பொற்பாதங்களில் சமர்ப்பித்து வெளியிட்டோம்.

பதின்மூன்றாவது நூலாக, எல்லாம்வல்ல இறைவன் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் திறத்தைக் கூறி, அருள்புரியும் விதத்தை வெளிப்படுத்தி, அடியேன் உள்ளிருந்து சற்குரு வெளிப்படுத்தி, அருளிய ஒப்பற்ற அருட் பெருஞ்ஜோதி அந்தாதி என்னும் நூலை 25-01-2005 தைப்பூசத்தன்று திருவண்ணாமலை ஆகாஷ் ஹோட்டல்ஸ் உயர்திரு. S.R. முத்துகிருஷ்ணன் பேருதவியால் வடலூரில் தர்மசாலையில் வெளியிடப்பட்டது.

பதினான்காவதாக சன்மார்க்க தெய்வம் எனும் நூலை நாகர்கோவில் ஜெயகுமாரி புத்தக நிலைய உரிமையாளர் S. அசோக்குமார், பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா 80-வது பிறந்த நாளான 23-11-2005-ல் வெளியிடுகிற புண்ணியம் பெற்றார்.

பதினைந்தாவது நூலாக "சற்குரு கோவிந்த சுவாமிகள்" 30-12-2005 ஸ்ரீ ஆஞ்சநேயர் ஜெயந்தி திருநாளில் ஆரல்வாய்மொழி இராமலிங்க சுவாமி நிலைய அன்பர் ஜோதி ஸ்ரீ N. கனக சபாபதி அவர்களால் வெளியிடப்பட்டது. பதினாறாவது நூலாக அடியேன் ஏற்கனவே இலவசமாக வெளியிட்ட எட்டுநூற்களைத் தொகுத்து "அஷ்டமணி மாலை" என்று 06-04-2006-ல் அடியேனின் 50-வது பிறந்தநாளில் நட்சத்திரத்தில் 1992-ம் வருட முதலே எம்மை ஆதரித்துக் காத்தருளும் என் உயிர் சென்னை அன்பர்கள் ஜோதி ஸ்ரீ த. முருகேசன், ஜோதி ஸ்ரீ G. நாராயணா ஜோதி ஸ்ரீ G. கோபால கிருஷ்ணன் ஆகிய மும்மூர்த்திகளும் வெளியிட்டார்கள்.

பதினேழாவது நூலாகவும் அடியேனின் பொன்விழா ஆண்டு வெளியீடாகவும், ஆன்மீக வெள்ளிவிழா ஆண்டுவிழா வெளியீடாகவும் "செல்லவமே சீர் தாருமே" நூல் அடியேனின் 14 வருட திருமண நிறைவு நாளில் 08-04-2006-ல் எம் உயிரோடுகலந்துவிட்ட ஜோதி ஸ்ரீ R. சிவலிங்கம் சென்னை அவர்கள் வெளியிட்டார்.

பதினெட்டாவது நூலாக "செந்திலாண்டவன் பாமாலை" 11-04-2006 பங்குனி உத்திர நாளில் என் வணக்கத்திற்குரிய பெரியவர் R. துரைசாமி அவர்களும் அன்பின் இனிய நண்பர் S.B. சுப்பையா அவர்களும் வெளியிட்டார்கள். நன்றி நன்றி.

பத்தொன்பதாவது நூலாக "அன்பு உதய மலர்" 14-04-2006 தமிழ் புத்தாண்டு ஸ்ரீவிய வருஷ வெளியீடாக சென்னை சன்மார்க்க சங்க ஜோதி ஸ்ரீ இராஜப்பா வெளியிட்டு புண்ணியத்தை தேடிக் கொண்டார்கள்.

இருபதாவது நூலாக வள்ளலார் விழியே 14-04-2006 தமிழ் புத்தாண்டு ஸ்ரீவிய வருஷ வெளியீடாக, ஆசிரியரின் 50 வயது பொன் விழா வெளியீடாக, சென்னை சன்மார்க்க சங்க ஜோதி ஸ்ரீ கணேஷ் அவர்கள் வெளியிடும் புண்ணியம் பெற்றார்கள். அவர்கள் இறைவன் அருளால் சகல நலன்களும் பெற்று வாழ்வாங்கு வாழ பிரார்த்திக்கின்றேன்.

இருபத்தோராவது நூலாக ஜோதிமணி மாலை 24-07-06 ஆடி அமாவாசையன்று நெய்வேலி சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்க ஜோதி ஸ்ரீ நிர்மலா தேவி அவர்கள், மகன் ஜோதி ஸ்ரீ நகுலன், அவர்கள் மருமகள் ஜோதி ஸ்ரீ Dr. இரா. அருள்மொழி அவர்கள் வெளியிடும் புண்ணியம் பெற்றார்கள்.

இருபத்திரண்டாவது நூலாக இந்த ஜோதி ஐக்கூ அந்தாதி நம் இந்திய திருநாட்டின் 59-வது சுதந்திர தினமான 15-08-2006-ல் கன்னியாகுமரி தங்கஜோதி ஞானசபை அன்பர்கள் S. தங்கம், S.S. சுயம் ஜோதி ஆகியோர் வெளியிடும் புண்ணியம் பெற்றார்கள்.

எம் வாழ்க்கை மேம்பட உதவிடும் தூயஆத்மாக்கள் எல்லோருக்கும் என்றென்றும் எமது இதயங்கனிந்த நன்றி பல.

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தின் சென்னை அணுக்கத் தொண்டர் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தின் நெய்வேலி அணுக்கத் தொண்டர்கள் நிர்மலா தேவி ஆகியோருக்கும் அடியேன் என்றும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். நன்றி.

அடியேனை காத்து அருளும் நண்பர்கள் T. முருகேசன், G. நாராயணா, G. கோபாலகிருஷ்ணன், ஆரல்வாய்மொழி, N. கனக சபாபதி, நாகர்கோவில், M. கோபால ஆசான் மகன் ராஜா, ஆசான் சேகர் ஆகிய அனைவருக்கும் எமது இதயங்கனிந்த நன்றி நன்றி.

எல்லோரும் எல்லா நலனும் பெற்று நலமுடன், சிறப்புடன், வளமுடன் வாழ்வாங்கு வாழ வேண்டி இறைவனை வணங்குகின்றேன். எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!

என்றும் உண்மையுள்ள,

**சிவ. செல்வராஜ்,**
கன்னியாகுமரி.

## ஜோதி ஐக்கூ அந்தாதி

எல்லாம் வல்ல இறைவன் அருளால் சற்குரு திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் ஆசியால் அடியேன் எழுதி வெளிவரும் 22-வது நூலாக இந்த "ஜோதி ஐக்கூ அந்தாதி" நம் தாய் திருநாடாம் இந்திய சுதந்திர 59வது வருட 15-08-2006-ல் வெளிவருவது எமக்கு பெருமகிழ்ச்சியை தருகிறது.

கன்னியாகுமரி சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தின் ஜோதி. ஸ்ரீ S. தங்கம், ஜோதி. ஸ்ரீ S.S. சுயம் ஜோதி அவர்கள் வெளியிடும் பாக்கியம் பெற்றார்கள் அவருக்கு எமது இதயங்கனிந்த நன்றி.

இலக்கண இலக்கிய மரபு கவிதைகள் சங்க காலந்தொட்டே வழங்கி வருவது தமிழ் மொழியின் சிறப்பு! என்றும் எல்லோராலும் போற்றி பாதுகாக்கப்பட வேண்டிய உன்னதமான ஒப்பற்ற கவிகள் தமிழில் ஏராளம்! ஏராளம்!

புதுக்கவிதைக்கு வித்திட்ட மகாகவி பாரதி ஓர் சுதந்திர போராட்ட தியாகி! ஞானக்கவி! புதுக்கவிதை ஐக்கூ கவிதையாக பரிமளித்தது. பற்பலர் புதுக்கவிதையும், ஐக்கூ கவிதையும் இயற்றினர்.

அடியேனுள் எழுந்த ஆன்ம தாகமும் புதுக்கவிதையாக ஐக்கூ கவிதையாக வடிவம் பெற்றது! எனக்கு வேறு எதுவும் தெரியாது ஆன்மீகத்தை தவிர! இதுவரை அடியேனுள்ளத்தில் உதித்த பாக்கள் பல நூல்களாக வெளிவந்து உள்ளது. இப்போது இந்த ஐக்கூ கவிதை நூல் வருகிறது. உங்கள் கரங்களில் தவழ்கிறது. எல்லா ஞானிகளுக்கும் வணக்கம் சொல்ல எண்ணியது அடியேன் உள்ளம். அதுவே இந்நூலாக உருப்பெற்றது.

101ஐக்கூ கவிதைகள் 101 தெய்வ திருவுருவங்களை தாங்கி வருகிறது.

முதலில் ஆதிகுரு ஸ்ரீதட்சணாமூர்த்தி, இரண்டாவது ஆதி சித்தர் ஸ்ரீசிவன், மூன்றாவது சித்தன் ஆகிட அமுதம் தரும் தாய் வாலை கன்னியாகுமரி ஸ்ரீபகவதியம்மன், நான்காவது சித்தன் என உறுதிதரும் தேவ சேனாதிபதி செந்திலாண்டவர், ஐந்தாவது கலியுக காவலன் ஞானவான் சிரஞ்சீவி ஸ்ரீ ஆஞ்சநேயர், ஆறாவது பக்தன் சொல்ல பரமன் எழுதிய ஒப்பற்ற திருவாசகம் உரைத்த ஞானி ஸ்ரீ மாணிக்கவாசகர்.

தொடர்ந்து 63 நாயன்மார்கள் 12 ஆழ்வார்கள் 20 சித்தர்கள் ஆக 101 தெய்வ திருவுருவங்கள் - இந்நூலை அலங்கரிக்கின்றது. இது அடியேன் செய்த புண்ணியமே!

அடியேன் வாழ்வில் வந்த ஞான நூற்கள் அனைத்தும் பொக்கிஷமே அதிலும் இந்த "ஜோதி ஐக்கூ அந்தாதி" மகுடம் போன்றதே! மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

கடந்த இருபத்தைந்து ஆண்டு காலமாக எல்லா வகையிலும் உதவி காத்து அருளும் எல்லா ஞானிகளுக்கும் நண்பர்களுக்கும் சென்னை நெய்வேலி கன்னியாகுமரி சபை அன்பர்களுக்கும் என்றென்றும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

நன்றி நன்றி வாழ்க வாழ்க வளமுடன் வாழ்க.

என்றும் உண்மையுள்ள,
**சிவ. செல்வராஜ்,**
கன்னியாகுமரி.

## இரண்டாம் பதிப்பின் நன்றியுரை

1980-ல் ஆன்மீக வாழ்க்கையை துவக்கி வைத்து அடியேனை, 12 வருட முடிவில் 1992-ல் "கண்மணி மாலை" எனும் உலகின் முதல் மெய்ஞ்ஞான நூலை எழுதி வெளியிட வைத்தார். திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்கள்!

அடுத்த 12 ஆண்டு முடிவில் 2004-ல் அடியேனை குருபீடத்தில் அமர்த்தி தங்கஜோதி ஞானசபையை உருவாக்கி தந்தார். திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்கள்!

இந்த 2013-ம் ஆண்டு தைப்பூசம் வரை 39 மெய்ஞ்ஞான நூற்கள் எழுதி வெளியிடச் செய்தார் வள்ளலார்! எல்லா ஞானிகளின் அருளாசியும் கிடைக்கச் செய்தார்! என்ன புண்ணியம் செய்தேனோ!

அடியேன் எழுதி வெளியிட்ட இந்த நூற்கள் 39-ம் இதுவரை இவ்வுலகில் யாரும் சொல்லாத மெய்ஞ்ஞான இரகசியங்களை வெளிப்படுத்தி, உலகர் அனைவரும் மரணமிலா பெருவாழ்வு பெற உதவுமே என்ற நோக்கிலே தான் வெளியிட்டேன்!

கண்மணி மாலையிலிருந்து அனைத்து நூற்களும் எமது அன்பர்கள் தந்த காணிக்கையால் தான் வெளியிட முடிந்தது! தங்க ஜோதி ஞான சபையின் அன்பர்கள் தங்கமானவர்கள்! சற்குரு என அடியேனை ஏற்றுக் கொண்ட தூய உள்ளங்கள்!

தங்க ஜோதி ஞானசபை மட்டுமே இவ்வுலகில் தற்போது மெய்ஞ்ஞானத்தை எல்லோருக்கும் உணர்த்தி வருகிறது! பட்டவர்த்தனமாக ஒளிவு மறைவின்றி எல்லோருக்கும் ஞானத்தை விளக்குவது அடியேனின் 39 நூற்கள் மட்டுமே!

ஞானம் வேண்டும் தூய ஆத்மாக்களே வாருங்கள்! கன்னியாகுமரி தங்க ஜோதி ஞான சபைக்கு! உலகில்இதுவரை தோன்றிய எல்லா ஞானிகளும் உலகுக்கு இறைவனாம் அந்த ஒருவனைப் பற்றியே உபதேசித்துள்ளனர் என்பதை அறியலாம்!

தன்னார்வ தொண்டர்கள் தான் தங்க ஜோதி ஞானசபையின் சொத்து! ஊர்ஊராக சென்று எல்லோருக்கும் ஞானத்தை எளிமையாக, யாவரும் புரிந்து கொள்ளும்படி தெளிவாக உரைத்து ஞானதானம் செய்து வருகிறார்கள்!

தங்க ஜோதி ஞான சபையின் பிள்ளைகள் என்றேயான் கருதுகிறேன்! இதுவரை யாரும் செய்யாத ஞான சாதனை! இரகசியமே இல்லை! என தெளிவு படுத்திய உபதேசம் இவர்களுடையது! குழந்தைகள் கூட புரிந்து கொள்ளும்!

இந்த ஜோதி ஐக்கூ அந்தாதி இரண்டாம் பதிப்பு ஒசூர் அன்பர்களால் வெளியிடப்படுகிறது! வள்ளலார், அவர்கள் ஆற்றும் ஆன்மீக சேவைக்கு உறுதுணையாக இருக்கிறார் என்பதை உணர்கிறேன்!

என்னையும் ஒரு பொருட்டாக கருதி இப்பணி செய்ய வைத்துக் கொண்டிருக்கும் உலக குரு திருவருட் பிரகாசவள்ளலார் பொற்பாத கமலங்களுக்கு ஆயிரமாயிரம் கோடி வந்தனம்! வந்தனம்!

தங்க ஜோதி ஞானசபை வள்ளலார் ஆதிகுரு, ஆதி சக்தி வாலைகுமரி ஞானபண்டிதன் ஆபத்பாந்தவன் அர்த்த நாரீஸ்வரர் சங்கர நாராயணர் படங்களையும் மிகக் குறைந்த விலைக்கு கொடுத்தும் ஞானசேவை பக்தி சேவை புரிகிறார்கள்! நிறைய துண்டு பிரசுரங்களும் இலவசமாக தருகிறார்கள்! அவர்கள் ஞானதானம் சிறக்க வாழ்த்துக்கள்!

என்றும் உண்மையுள்ள
**சிவ செல்வராஜ்**

# ஜோதி ஐக்கூ அந்தாதி




சங்கரநாராயணர்

அர்த்த நாரீஸ்வரர்

"ஹரியும் சிவனும் ஒண்ணு
அறியாதவன் வாயில் மண்ணு"


"நம் உடலில் வலஇடப்பாகம்
ஆண் பெண் அம்சமே"

**அந்தமும் ஆதியும் ஆன்மீகமே**



ஸ்ரீ தட்சிணாமூர்த்தி

உலகம்
என்னையும் ஏற்றது
அன்னையும் தந்தையும் பெற்றதால்



சிவன்


பெற்றதால்
பேணியே வளர்த்தனர்
என்னை வளர்த்தான் இறைவனே



வாலை


இறைவனே
என்னுள் இருக்கிறான்
நான் எங்கே இருக்கிறேன்

இருக்கிறேன்
இறைவன் அம்சமாக
சீவன் என்று அறியலாமே



முருகன்







அனுமான்

அறியலாமே
சீவன் இருப்பிடத்தை
முயன்று பார்த்தால் முடியும்

முடியும்
அறிவுள்ளோர் நம்பிக்கை
ஆன்றோர் அறிவித்ததை பாரே



மாணிக்கவாசகர்




சுந்தரர்

பாரே
போற்றும் பேரறிவாளர்
பண்பு உரைத்ததை படியே




திருநீலகண்டர்

படியே
சாத்திரத்தில் சிறந்தது
திருமந்திரம் திருமூலர் அருளினாரே



இயற்பகையார்

அருளினாரே
தோத்திரத்தில் சிறந்தது
திருவாசகம் மாணிக்க வாசகரே



இளையான்
குடி மாறர்

வாசகரே
பாத்திரத்தில் சிறந்தது
திருவருட்பா இராமலிங்க சுவாமிகளே



மெய்ப்பொருள் நாயனார்


சுவாமிகளே
சிந்தையை தெளிவிப்பது
சித்தர்கள் அருளிய பாடல்களே

பாடல்களே
பாடினால் பரவசமே
சரியை பக்தி நிலையாம்



விறன்மிண்ட நாயனார்






அமர்நீதி நாயனார்

நிலையாம்
பூசைகள் செய்வதுவே
கிரியை என்றே கூறுவர்

கூறுவர்
பிராணாயாமமே உயர்ந்தது
யோகம் என்பதே இதுதான்




எறிபத்தர்




இதுதான்
என அறியும் அறிவேயாம்
ஞானம் இவ்வளவே பூரணம்

பூரணம்
தன்னை அறிந்தாலே
தலைவனை அறியலாம் சத்தியம்










சத்தியம்
ஒழுக்கம் பண்பாடு
உள்ளவரே உள்ளவரை அறிவார்

அறிவார்
உண்மை குருவை
மெய்ப்பொருளை நாடியே பெறுவார்






அரிவாட்டாயர்


பெறுவார்
தீட்சை தசம்
அறிவால் அறிவர் குருவை

குருவை
காரணமும் காரியமும்
பெற்றவரே அடைவர் ஞானம்



ஆனாயர்





மூர்த்தி
நாயனார்

ஞானம்
பரிபூரண அறிவே
நன்றாக உணர்ந்து கொள்ளே

கொள்ளே
ஞானிகள் நவின்றதை
அறிவில் தெளிவு கிட்டும்




முருக நாயனார்



உருத்திரபசுபதி

கிட்டும்
மரணமிலா பெருவாழ்வு
வாழ்வாங்கு வாழலாம் நாமே

நாமே
சாதனை செய்தால்
சாதிக்கலாம் சர்வமும் பெறலாம்


திருநாளைப் போவார்




திருக்குறிப்புத் தொண்டர்

பெறலாம்
வைராக்கியம் இருந்தால்
பேரின்பம் தானாய் வந்திடுமே


வந்திடுமே
சன்மார்க்க ஒழுக்கத்தில்
வகையாய் மூலம் அறிந்தே


சண்டேசுவரர்




திருநாவுக்கரசர்

அறிந்தே
எட்டும் இரண்டே
பரிபாசை அனைத்தும் ஒன்றே



குலச்சிறையார்


ஒன்றே
மனதை செலுத்தியே
கடவுள் ஒருவரே உணர்வீர்



பெருமிழலைக் குறும்பர்

உணர்வீர்
உம்முள் இருப்பதை
பிரம்மம் சீவனாய் ஒளியாகியே

ஒளியாகியே
எங்குமாய் நிறைந்தவன்
நம்மிலும் இருக்கிறார் நாடுவோமே



காரைக்காலம்மையார்



அப்பூதியடிகள்


நாடுவோமே
நாதன் இருப்பிடத்தை
நம்புங்கள் நமன் இல்லையே

இல்லையே
இருவினை துன்பங்கள்
இதயத்தில் இறைவனை கண்டால்



திருநீலநக்கர்





நமிநந்தியடிகள்

கண்டால்
கண்ணின் ஒளியை
கண்மணியை எண்ணிப் பார்த்தே

பார்த்தே
இருக்கவே வேண்டும்
பரமன் நடனம் காணலாம்



திருஞானசம்பந்தர்



ஏயர்கோன் கலிக்காமர்


காணலாம்
காணாத காட்சிகளை
கண்டு மேலே செல்லலாம்

செல்லலாம்
சீவன் முக்தராகியே
சிவனும் சீவனும் ஒன்றாகியே



திருமூலர்





தண்டியடிகள்

ஒன்றாகியே
வரவே பாடுபடு
முச்சுடரும் சேர்ந்தாலே முக்தியே

முக்தியே
முடிவான நிலையாகும்
மூன்று தீயே ஆரம்பமாகும்




மூர்க்க நாயனார்



சோமாசி மாறர்

ஆரம்பமாகும்
உணர்வு சூட்டை
எண்ணி எண்ணி கூட்டே

கூட்டே
பத்து வரவே
எட்டும் இரண்டும் பத்தே


சாக்கியர்




சிறப்புலி நாயனார்

பத்தே
நாதங்கள் கேட்குமே
மயில் குயிலாகும் விந்தையே

விந்தையே
விந்துவும் நாதமும்
பார்த்து கேட்டபின் பாதமே



சிறுத்தொண்டர்



கழறிற்றறிவார்

பாதமே
திருவடியே ஆன்மாவே
பற்றினால் கிட்டுமே பேரின்பம்

பேரின்பம்
சிற்றின்பம் அல்ல
பெருவிரலை உறுதியாக பற்றே



கணநாதர்






கூற்றுவ நாயனார்

பற்றே
சந்திர சூரியனை
சக்தி சிவத்தை கண்களை

கண்களை
பெற்றிருந்தும் குருடரே
கண்மணியை அறியாத மானிடரே




புகழ்ச்சோழர்



நரசிங்க
முனைபரையர்


மானிடரே
மண்ணில் பிறந்தது
நல்ல வண்ணம் வாழவே

வாழவே
வழிகாட்டி சென்றனர்
வாழையடி வாழையென ஞானியர்



அதிபத்தர்







கலிக்கம்பர்

ஞானியர்
பலவாறு பகர்ந்தது
சிந்தித்து உறுதி பெறுவதற்கே

பெறுவதற்கே
நாமும் பிறந்தோமா
பேதமை நீக்கி பார்ப்பீரே




கலியநாயனார்



சத்தி நாயனார்

பார்ப்பீரே
உலகை ஒன்றாகவே
ஆன்ம நேயம் வளரணுமே



அய்யடிகள்
காடவர்கோன்


வளரணுமே
அறிவு அன்பு
சீவ காருண்யம் அனைவரிடமும்





கணம்புல்லர்

அனைவரிடமும்
அன்பு பாராட்டினால்
உயிர்கள் கைகூப்பித் தொழும்



காரிநாயனார்


தொழும்
பக்தியோடு சரணாகியே
பரகதி உனக்கு உண்டே



நெடுமாற
நாயனார்

உண்டே
கண்டித்ததை தவிர்த்தே
பசிக்கு புசித்து வாழ்வாயே

வாழ்வாயே
பாரோர் மெச்சிடவே
பகலவனை பற்றி நில்லே



வாயிலார்







முனையடுவார்

நில்லே
மனதை நிலை நிறுத்தியே
மணியில் ஊன்றி இருப்பாயே

இருப்பாயே
சும்மா சொல்லற
பசித்து தனித்து விழித்தே



கழற்சிங்கர்



இடங்கழி
நாயனார்


விழித்தே
விமலனை காணலாம்
சங்கற்ப விகற்பங்கள் அற்றால்



செருத்துணை நாயனார்

அற்றால்
ஏழு திரைகள்
தீப ஒளி காணுமே






புகழ்த்துணை
நாயனார்

காணுமே
கண்கள் வழியாகவே
கடத்துள் புகும் வாசலே



கோட்புலி
நாயனார்


வாசலே
தொடுவீர் மனதாலே
கண்ணின் மணியை எண்ணுவீர்



பூசலார்
நாயனார்


எண்ணுவீர்
நினைந்து உணர்ந்து
காணலாம் ஒளியை பலவாய்

பலவாய்
சிந்தையை விடாதீர்
சோதியே கடவுள் அம்சம்



மங்கையர்க்கரசியார்





நேச நாயனார்

அம்சம்
எப்போதும் இருப்பீர்
எந்நேரமும்காப்பான் அவனே

அவனே
உலகில் ஆண்மகன்
நாமெல்லாம் பெண் பிள்ளையே



கோச்செங்கட்சோழர்



திருநீலகண்ட யாழ்ப்பாணர்


பிள்ளையே
இறைவனுக்கு எல்லோருமே
அவனிடம் கிடையாது பேதம்

பேதம்
நீங்கினாலே பேரின்பம்
அபேதனாய் ஆனந்தமாய் வாழலாம்



சடைய நாயனார்







இசை ஞானியர்

வாழலாம்
சன்மார்க்க நெறியிலே
சித்தியெலாம் கிட்டிடும் நமக்கே

நமக்கே
நாயகனாவான் நம்பிரானே
நம்பினோர் கெடுவதில்லை நாதனை



பொய்கை ஆழ்வார்



பூதத்தாழ்வார்


நாதனை
நாமுய்ய நாடணுமே
கண்ணின் மணியில் கலந்தவனை

கலந்தவனை
கலந்தாலே மணமே
பஞ்சபூதமும் ஒன்றான பொருளே



பேயாழ்வார்





திருமழிசை ஆழ்வார்

பொருளே
மெய்ப்பொருளே கண்ணே
மணியே மூலமே முதலே

முதலே
ஆதியுநீ அந்தமுநீ
அறிந்தேன் குருவாலே ஆதரியே



நம்மாழ்வார்



மதுரகவி ஆழ்வார்

ஆதரியே
ஆதரவு அற்றவரை
பசிக்கு உணவளி ஒளியளி



குலசேகர ஆழ்வார்

ஒளியளி
உலகம் உய்யட்டுமே
போற்றும் உன்னையே என்றும்






பெரியாழ்வார்

என்றும்
சிவன் சிந்தையே
வேண்டும் மணியை கருதே



ஆண்டாள்

கருதே
ஒளியை ஒலியை
நாதமுடிவில் நல்லாளே



தொண்டரடி பொடியாழ்வார்

நல்லாளே
சக்தியாம் சிவம்பாதி
அருளாலே பெறலாம் சிவத்தை

சிவத்தை
சிந்தையில் இருத்தியே
அவன் அருளாலே வணங்கி



திருப்பாணத்தாழ்வார்






திருமங்கை ஆழ்வார்

வணங்கி
பெற்றோர் குருவை
மூர்த்தி தலம் தீர்த்தம்


தீர்த்தம்
அமுதம் கிட்டும்
பசி தாகம் அற்றிடும்



வால்மீகி
எட்டுக்குடி





அற்றிடும்
உலக விவகாரம்
உற்றிடும் வீடு பேறு





பேறு
பெறுவதற்கு அரியது
மானிடப் பிறவி இதற்கே







இதற்கே
பாடுபட்டனர் ஞானியர்
நாமும் படுவோம் பாடு





பாடு
ஆடு தேடு
நாடு ஓடு உள்ளே





உள்ளே
கண்மணி மத்திவழி
புகுந்தால் மனத்தால் முப்பாழே

முப்பாழே
தாண்டிச் சென்றாலே
திருநடனம் காணலாம் மகிழ்ந்தே









மகிழ்ந்தே
மற்றவர்கள் அறியவே
மகிமை சொல்லி இன்புறுவாயே

இன்புறுவாயே
இருப்பதை பகிர்ந்தே
ஏற்றமிகு மாற்றம் உனக்கே







உனக்கே
நானும் உரைத்தேன்
உணர்ந்ததை உள்ளபடியே உவந்தே





உவந்தே
வாழலாம் அனைவரும்
ஊக்கமுடன் பற்றுவீர் பரமனை







பரமனை
பார்த்தால் பசிதீரும்
பாவம் போகும் புண்ணியமே

புண்ணியமே
நல்லோர் இணக்கமே
பாரத நாட்டில் பிறந்ததுவே








பிறந்ததுவே
பிறக்காமல் இருக்கவே
அறிந்து உணர்ந்து உய்வீரே





உய்வீரே
நீரும் பாரும்
முயல்வீர் வெற்றி நிச்சயம்




நிச்சயம்
இருந்தால் வெல்லலாம்
நீர் மேல் நெருப்பை சேரலாம்





சேரலாம்
சீவன் சிவனுடன்
சித்தியும் முத்தியும் தருவானே





தருவானே
சகல சம்பத்தும்
சர்வ வல்லமையும் சடுதியில்

சடுதியில்
வருவான் தருவான்
சகல கலை ஞானமுமே








ஞானமுமே
பெற்ற பின்னரே
போற்றுமே இந்த உலகம்.

ஸ்ரீ இராமானுஜர்



எல்லோரும்
சொர்க்கத்துக்கு
போக வழி காட்டியவர்

ஸ்ரீ இராமலிங்கர்




எல்லோரும்
மரணமிலா பெரு வாழ்வு
பெற வழிகாட்டியவர்




கன்னியாகுமரி
தங்க ஜோதி ஞான சபை
ஞான சற்குரு சிவசெல்வராஜ்
எழுதி வெளியிட்டது தான் இவை!
வடலூர் சத்திய ஞான சபையில் உண்மை அறிய?
கன்னியாகுமரி தங்க ஜோதி ஞான சபை வருக!

உலகில் முதலாவதாக ஞான இரகசியங்களை
வெளிப்படுத்திய ஞானநூற்கள்!



ஞான தானம் செய்! ஞான தவம் செய்!

# ஆதி சக்தி





நிர்மலா தேவி
நெய்வேலி



வனிதா
கடலூர்



அருள்மொழி
நெய்வேலி




நகுலன்
நெய்வேலி




# குருவே உன்னடி சரணமே!

அறிந்து உணர்ந்து பதினாறும் பெறவே
ஆன்மீகம் மணக்கும் ஆன்மநேய ஒருமைப்பாடே
இணைய தளத்திலும் உயிரை வளர்க்கவே
ஈடு இணையிலா சாகாக் கல்வியே
உண்மை அறிந்து உயிரை வளர்க்கவே
ஊரும் பாரும் உணர்ந்து சிறக்கவே
என்றும் எங்கள் கண்மணி மாலையே
ஏற்று மகிழ்ந்து அழுது தொழுது
ஐயம் நீங்க குருவை பணிந்து
ஒன்றும் செய்யாமல் சும்மா இருந்து
ஓதி உணர்ந்து உணர்வுடன் கூடியே
ஔஷதம் என்றும் அருட்பெருஞ் ஜோதியே!

பணிவுடன்
**தங்கம் சிவ செல்வராஜ்**



இராமேஸ்வரத்தில்



குரு குடும்பம்

ஞானசற்குரு - ஸ்ரீலஸ்ரீ -

# சிவசெல்வராஜ் அவர்கள்

## பூவுடல் எடுத்த 50 ஆண்டுகள் 'பொன்விழா'

## திருவடியை சரணடைந்து

## 25 ஆண்டுகள் 'வெள்ளிவிழா'


ஜெயப்பிரகாஷ்
ஒசூர்




சரவணன்
திருச்சி


ஈஸ்வரமூர்த்தி
ஒசூர்


வேலு
ஒசூர்

பூரணமாய்ப் பூத்தெழுந்த புண்ணியமெய் மாமலரின் புகழ்விளங்க வந்த அய்யனே,
புருவநடுப் பொட்டினிடைப் புத்தமுதப் புனல்பெருகப் புதையலான ஞான மெய்யனே
மாரணத்தை வெல்லுகின்ற மாமணியின் சாட்சிதனை மானுடர்க் களிக்க எண்ணியே . . .
மாதவத்தி லாழ்ந்துஞான மன்றிலேறி கனிபறித்த 'மாகுரு சிவ செல்வ ராஜரே'
காரணமாய் நான்குயுகக் காரியமும் ஆற்றிடவே கருமணியுள் கனலு மாகியே
கருவறையும்; கல்லறையும்; காத்தருளும் கடவுளெனக் கண்கலந்த வான வட்டமே
ஆரணமாய்ச் சிரசிடையில் அகரமாகி நின்றொளிரும் ஆஃத்துணர்த்த வந்த செல்வமே
அடிபிடிக்க அமரமென்ற அறிவுணர்த்தி ஞானமீயும் அற்புத மெய்ஞ்ஞான குருபரா . . .!

## வள்ளலார் காட்டிய வழியில் விழி வழியே
## தீட்சை வழங்கும் ஞான சற்குரு - ஸ்ரீலஸ்ரீ
## ஆன்மீகசெம்மல் சிவ செல்வராஜ்




குமரேசன்
ஒசூர்


ஞானபண்டிதன்
ஒசூர்


மஞ்சுநாத்
ஒசூர்


விஜயன்
கும்பகோணம்



விமல்
சென்னை


N. பாலு
பெங்களூர்


வாசு
பெங்களூர்

உலக குரு வள்ளலாரின் உண்மை வாரிசு

ஆன்மீகசெம்மல் சிவ செல்வராஜ்





பிரகாஷ்
ஒசூர்



M.J. சிவகுமார்
பெங்களூர்



சபை அன்பர்கள்

# ஜோதி
# ஐக்கூ அந்தாதி

iq



ஆன்மீக செம்மல் ஞானசற்குரு

## சிவ செல்வராஜ்

தங்க ஜோதி ஞானசபை

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

கன்னியாகுமரி.